தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சமூக நலம் – ஊனமுற்றோர் நலம் – ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீட்டிற்கு தற்போது பின்பற்றப்படும் இன சுழற்சி முறையினை மாற்றியமைத்தல் மற்றும் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு தகுதியான ஊனமுற்ற நபர் கிடைக்காததால் நிரப்பப்படாத காலிப் பணியிடங்களை அடுத்தடுத்த மூன்றாண்டுகளுக்கு முன் கொணர்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.4)துறை

அரசாணை(நிலை) எண்.200 நாள் : 22.12.2006

படிக்க

1) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண். 166/ஆர்.என்.டி/டி2/2000 நாள் 2.2.2000

2) அரசாணை (நிலை) எண் 105 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 20.6.2000

3) ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் நேர்முக கடித எண்.1089/ஆர்.டி.3–1/2000, நாள் 28.9.2000

4) ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் நேர்முக கடித எண்.6673/ஆர்.டி.3–1/2000, நாள் 20.8.2002

5) இந்திய அரசின் பணியாளர், பொது துயர் துடைப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின் குறிப்பாணை எண். 36035/3/2004/ பணியமைப்பு நாள் 29.12.2005

------

ஆணை

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வரையறுக்கப்பட்டபடி தற்போது வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இதன்படி 10,000 காலிப்பணியிடங்களில் 300 பணியிடங்கள் ஊனமுற்றோருக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

2. மேற்படி சுழற்சியில், சில சுற்றில் ஊனமுற்றோருக்கு மூன்று இடங்களுக்கு பதிலாக இரண்டு இடங்களும், சில சுற்றில் நான்கு இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. சில சுற்றில் ஊனமுற்றோரின் குறிப்பிட்ட பிரிவினருக்கு ஒரு இடம் கூட ஒதுக்கப்படவில்லை. ஆனால், வேறு பிரிவினருக்கு ஒரு இடத்திற்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது, மேலும், சுழற்சியின் குறிப்பிட்ட சுற்றில் குறிப்பிட்ட ஊனமுற்ற பிரிவினரில் தகுதியானவை இல்லையெனில், அச்சுற்றில் அந்த பிரிவினர் பணியமர்த்தப்பட இயலாது. மேற்குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை தவிர்க்கும் பொருட்டு மத்திய அரசில் பின்பற்றப்படும் முறையினை தமிழ்நாட்டிலும் பின்பற்றலாம் என ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவில் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாத காலிப் பணியிடங்களை அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு முன் கொணருவது குறித்து விவாதித்து, மத்திய அரசில் செயல்படுவது போன்று ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடத்திற்கு தகுதியான நபர் கிடைக்கவில்லையென்றால் அவைகளை அடுத்த மூன்றாண்டுகளுக்கு முன்கொணரப்பட அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

4. மத்திய அரசு மூன்று தேர்வு ஆண்டுகளுக்கு ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடம் முன்கொணரப்பட ஆணையிட்டுள்ளது என்று தெரிவித்துள்ள ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், ஆதிதிராவிடர் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு உள்ளது போல், ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு தகுதியான ஊனமுற்றவர் கிடைக்காத காரணத்தால் காலியிடம் இருப்பின் அடுத்த தேர்வு ஆண்டுக்கு அந்த காலியிடத்தை முன்கொணர தமிழ்நாட்டில் வழிவகையில்லை என்று தெரிவித்து ஊனமுற்றோருக்கென ஏ.பி.சி மற்றும் டி பணிகளில் பார்வையற்றோர், காதுகேளாதோர், கை, கால் ஊனமுற்றோர் ஆகியோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிரப்பப்படாத காலியிடங்கள் அடுத்தடுத்த மூன்று தேர்வு ஆண்டுகளுக்கு முன்கொணர வழிவகை செய்ய தேவையான சட்ட திருத்தம் செய்து ஆணை வெளியிடும்படி அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கருத்துருவினையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்துக்களையும் கவனமாக பரிசீலித்த பின்னர் அரசு பின்வரும் ஆணைகளை வழங்குகிறது:—

(அ) மத்திய அரசில், 100 காலிப் பணியிடங்கள் மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு 33 காலிப் பணியிடங்களுக்குள் ஒரு ஊனமுற்றவரை தேர்வு செய்த இனச் சுழற்சி பட்டியலில் (Communal rostor) அவர் இனத்திற்கு எதிராக அவரின் தேர்வை கணக்கிடுவது போன்று இம்மாநிலத்திலும் அரசு துறைகள், கழகங்கள் மற்றும் வாரியங்களில் 100 புள்ளி கணக்கீடு பதிவேட்டில் ஊனமுற்றோருக்கான காலி பணியிடங்கள் மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு 33 காலிப்பணியிடங்களுக்குள் ஒரு ஊனமுற்றவரை தேர்வு செய்து இனசுழற்சி பட்டியலில் (Communal rostor) அவர் சார்ந்த இனத்திற்கு, எதிராக அவரின் தேர்வை கணக்கிடு முறையை கடைபிடிக்க அரசு ஆணையிடுகிறது.

(ஆ) ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களுக்கு தகுதியான ஊனமுற் நபர் கிடைக்காத பட்சத்தில் அது நிரப்பப்படாத காலிப்பணியிடங்களை மத்திய அர கடைபிடிப்பது போன்று அடுத்தடுத்த மூன்று ஆண்டுகள் வரை முன் கொணர அ ஆணையிடுகிறது.

6. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகள் பொதுவிதிகளுக்கு பணியாளர் மற்றும் நிர்வ சீர்திருத்தத்துறையில் தேவையான திருத்தம் வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்,–
சென்னை 6

செயலாளர்
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
சென்னை 2

அனைத்துத் துறை செயலாளர்கள், சென்னை 9
அனைத்துத் துறை தலைவர்கள் / தமிழ்நாடு அரசு நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகள்
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்
தலைமைக் கணக்காயர், சென்னை 18/35

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 5/35/79/9

பதிவாளர்,
சென்னை உயர்நீதிமன்றம், சென்னை – 104,
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை – 2

(அரசிதழில் வெளியிட)
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 6

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9

சமூக நலத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 9

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை (எஸ்) சென்னை 9

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை – 9

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,
சென்னை – 9

சட்டத்துறை, சென்னை 9

நிதித்துறை, சென்னை – 9

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் அனைத்து பிரிவுகள்,
சென்னை – 9

இ.கோ./உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.